ஊடக அறிக்கை

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தினால் நல்லூர் ஆலய முன்றலில் 03.07.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் பட்டதாரிகளின் வேலைவாய்ப்புத் தொடர்பாக நடத்தப்பட்ட கலந்துரையாடல் தொடர்பான ஊடக அறிக்கை வருமாறு:

மேற்படி கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. பட்டதாரிகள் நாடளாவிய ரீதியில் வேலைவாய்ப்பினைக்கோரி அரசிற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் தொடர் போராட்டங்களை நடாத்திவரும் இச்சூழ்நிலையில் வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் பட்டதாரிகள் பலர் இன்னமும் வேலைவாய்ப்பு வழங்கப்படாமல் உள்ளனர். இந்நிலையில் அண்மைக்காலங்களில் பட்டதாரிகளின் நியமனம் தொடர்பான அறிவிப்புகளை மத்திய மற்றும் மாகாண அரசுகள் விடுத்துள்ளன. இது பட்டதாரிகளுக்கு மகிழ்ச்சி தருகின்ற விடயமாகக் காணப்படுகின்றது. எனினும் மிக விரைவாகவும் நீதியான முறையிலும் நியமனங்கள் வழங்கப்படவேண்டும். அத்தோடு பட்டதாரிகளின் நிலை இவ்வாறு கேள்விக்குறியாகக் காணப்படுகின்ற சூழ்நிலையில் நாடளாவியரீதியில் க. பொ. த. உயர்தரத் தகைமையுடன் 23000 பேர் அரச ஆசிரிய சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் தொண்டர் ஆசிரியர்இ ஆசிரிய உதவியாளர் என்ற அடிப்படையிலும் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக அறிகிறோம். இதில் வடமாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களின் எண்ணிக்கையானது செல்வாக்குகளின் அடிப்படையில் பன்மடங்கு அதிகரித்துள்ளமை அறியமுடிகிறது. இவ்வாறு பொருத்தமற்றவர்களுக்கு நியமனங்கள் வழங்குவதால் கல்வி மட்டம் வீழ்ச்சியடைவதோடு தகுதியான பட்டதாரிகள் பாதிப்படைகின்ற நிலைமை காணப்படுகின்றது. அவ்வாறு செல்வாக்களினால் பொருத்தமற்றவர்களுக்கும் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுமாகவிருந்தால் ஆதாரபூர்வமாக எம்மால் நிரூபிக்கப்படும்.

வேலைவாய்ப்பு என்பது இன்றைய நிலையில் அனைவருக்குமே மிகவும் பிரச்சினையான விடயமாகக் காணப்படுகிறது என்பதை நாம் அறிவோம். இத்தகைய வெற்றிடங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பட்டதாரிகள்

உள்ளீர்க்கப்படவேண்டும். குறிப்பிட்ட காலப் பயிற்சிக்குப் பின்னரான நியமனங்களுக்கும் நாம் தயாராகவுள்ளோம். அத்தோடு தற்போது பட்டதாரி ஆசிரிய நியமனங்கள் மற்றும் ஏனைய நியமனங்களில் பரீட்சை அடிப்படையிலான தெரிவுகள் இடம்பெறுகின்றன. பட்டதாரிகள் ஆகிய எங்களைப் பொறுத்தவரையில் இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் படித்துப் பட்டச்சான்றிதழ்களைப் பெற்றவர்களாகவே உள்ளோம். எனவே இத்தகைய பரீட்சைமுறைகளைத் தவிர்த்துத் தகைமை அடிப்படையில் நேர்முகத்தேர்வின்மூலம் நியமனங்கள் வழங்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம். வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் கடந்த மூன்று தசாப்தகால யுத்தத்தின் காரணமாக 35வயதிற்கு மேற்பட்ட கணிசமான பட்டதாரிகள் இன்னமும் வேலைவாய்ப்பின்றிக் காணப்படுகின்றனர். இந்நிலையில் இவ்வருட நியமனத்தில் குறித்த வயதுடையவர்களும் முன்னுரிமை அடிப்படையில் உள்வாங்கப்படவேண்டும்.

அனைத்து வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் நாடளாவியரீதியில் பட்டதாரிகளின் வேலைவாய்ப்புத் தொடர்பாகத் தொடர்போராட்டங்களை மாகாணரீதியில் நடாத்திவருகிறது. இதன் தொடர்ச்சியாக எதிர்வரும் 23.07.2016 சனிக்கிழமை யாழ். மாவட்ட செயலகம் முன்பாக வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகம் அனைத்து வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்துடன் இணைந்து மாபெரும் கவன ஈர்ப்புப் போராட்டத்தினை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது.

இன்றைய கலந்துரையாடலில் வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தினுடைய புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவராக திரு. ஜெ. துஷாந்தன் அவர்களும் செயலாளராக திரு. தெ. இந்திரகுமார் அவர்களும் உபதலைவராகஇ செல்வி எஸ். துர்க்காயினி அவர்களும் இணைப்பாளராகஇ திரு. ரீ. ஹென்ஸ்மன் அவர்களும் ஏனைய உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்இ

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகம்